# விபத்தில் பல உறுப்புகள் சேதமடைந்தவரை உடனடியாக காப்பாற்றுவது எப்படி?

## கே.எம்.சி.ஹெச்.டாக்டர் சு.க.திருமலைசாமி விளக்கம்

**கோவை, நவ.6:** கே.எம்.சி.ஹெச். பல்துறை மருத்துவமனையாகும். விபத்திற்குள்ளான பலர் உடனடியாக இங்கு கொண்டு வரப்பட்டு காப்பாற்றப்பட்டுள்ளனர்.



டாக்டர். சு.க.திருமலைசாமி.

இதுகுறித்து கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை எலும்பு முறிவு, ஆர்த்ராஸ்கோபி மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சு.க.திருமலைசாமி கூறியதாவது:

கடுமையான விபத்திற்கு ஆளாகுபவர்களுக்கு கல்லீரல், எலும்பு, மூளை, நுரையீரல் உள்ளிட்ட பல உறுப்புகள் சேதமடைந்திருக்கும். ரத்தக்கசிவு ஏற்படும். ஒரு எலும்பு உடைந்தால் ஒரு லிட்டர் ரத்தம் வெளியேறி உடம்பிற்குள்ளேயே இருக்கும். ரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது வெளியே தெரியாது. இவ்வாறு 3 எலும்பு உடைந்தால் 3 லிட்டர் ரத்தம் வெளியேறும். உடம்பில் உள்ள 5 லிட்டர் ரத்தத்தில் கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் உள்ளிட்ட உறுப்புகள் சேதத்திற்கேற்ப ரத்த சேதம் அதிகரிக்கும்.

இதனால் உடலுக்கு தேவையான ரத்த சுழற்சி பாதிக்கப்பட்டு ரத்த அழுத்தம் குறையும். அவர்களுக்கு உடனடியாக ரத்த கசிவு பகுதிகள் கண்டறியப்பட்டு, அவை நுண்துளை அறுவை சிகிச்சை மூலம் ரத்த கசிவு நிறுத்தப்பட வேண்டும். இழந்த ரத்தத்தை ஈடுகட்ட ரத்தம் செலுத்த வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட இதர உறுப்புகளை உடனடி சிகிச்சை மூலம் தற்காலிக பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு தீவிர சிகிச்சை பிரிவில் தயார் நிலையில் உள்ள எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர், மற்றும் குடல், இருதயம், மூளை, ரத்தக்குழாய், நுண்துளை, தீவிர சிகிச்சை ஆகிய பல்வேறு துறை மருத்துவர்கள் ஒருங்கிணைந்து முதற்கட்ட சிகிச்சையை மேற்கொண்டு, உயிரிழப்பை தடுப்பார்கள்.

இச்சிகிச்சை, விபத்து ஏற்பட்டவுடன் ‘கோல்டன் ஹவர்’ என்றழைக்கப்படும் குறிப்பிட்ட ஒரு சில மணி நேரத்திற்குள் மேற்கொள்ள வேண்டிய அவசர சிகிச்சையாகும்,

பின்னர் மருத்துவர் குழு ஆலோசித்து பிற அறுவை சிகிச்சைகள் செய்து சேதத்திற்குள்ளான உறுப்புகளை சீரமைப்பார்கள். இவ்வாறு சிகிச்சை பெறுபவர் 3 மாதத்தில் குணமாகி இயல்பு வாழ்க்கை திரும்புவார்கள். வாழ்க்கை வசப்படும்.

இது விபத்திற்குள்ளானவர்களை உடனடியாக அருகிலுள்ள பல்துறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றால் தான் சாத்தியமாகும். இத்தகைய விழிப்புணர்வு இல்லாமல், போதிய உள்கட்டமைப்பு, நவீன சிகிச்சை, பல்துறை மருத்துவர்கள் இல்லாத மருத்துவமனைக்கு கொண்டு சென்றால் தேவையான உடனடி சிகிச்சை கிடைக்காமல் போய்விடும். பின்னர் காலதாமதமாக பல்துறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றாலும் காப்பாற்றுவது கடினமாகிவிடும்.

இதைத் தவிர்க்க விபத்து நடந்த இடத்திலிருந்து பாதிக்கப்பட்டவரை மீட்டு, அருகிலுள்ள பல்துறை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டியது, ஒரு உயிரை காப்பாற்ற மேற்கொள்ள வேண்டிய உன்னத காரியமாகும்.

மேலும் விபரங்களுக்கு, எலும்பு முறிவு, ஆர்த்ராஸ்கோபி மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சு.க.திருமலைசாமி, கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் :0422 : 4323111, மொபைல் : 73735 66666 இ-மெயில் : *drthirumalaisamy@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt